TAMIL / TAMIL

## கொரோனா வைரஸ் நோய் (கொவிட் -19) (Coronavirus disease (Covid-19)

**நிலம், வான் அல்லது கடல்** மூலம் கனடாவிற்கு வரும் கொவிட்-19 அறிகுறிகள் இல்லாமல் முழுமையாக தடுப்பூசி போடப்பட்ட பயணிகளுக்கான தேவைகள்

| கனடா அரசு எல்லை நடவடிக்கைகள் |
|---|
| **கனடாவில் கொவிட்-19 மற்றும் மாறுபாடுகளின்அறிமுகம் மற்றும் பரவலை குறைக்க, தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் கனடா அரசு அவசர நடவடிக்கைகளை எடுத்துள்ளது. உங்களுக்கு முழுமையாக தடுப்பூசி போடப்பட்டிருந்தாலும், நீங்கள் கொவிட்-19 நோயால் பாதிக்கப்பட்டு மற்றவர்களுக்கு வைரஸ் பரவும் அபாயம் உள்ளது. மற்றவர்களை பாதுகாப்பாக வைத்திருக்க உதவுவதற்காக, கனடா உத்தரவில் (தனிமைப்படுத்தல், தனிமைப்படுத்தல் மற்றும் இதர கடமைகள் ) கொவிட்-19 இன் வெளிப்பாட்டின் அபாயத்தைக் குறைப்பதின் கீழ் நீங்கள் பூர்த்தி செய்ய வேண்டும்.**<br><br>அறிகுறியற்ற முற்றிலும் தடுப்பூசி போடப்பட்ட பயணிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கு இணங்கினால் கனடாவிற்குள் நுழைந்தவுடன் தனிமைப்படுத்தப்பட வேண்டியதில்லை. முழுமையாக தடுப்பூசி போடப்பட்டது என்றால் கனடாவிற்குள் நுழைவதற்கு குறைந்தது 14 நாட்களுக்கு முன்னர் கனடா அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தடுப்பூசியின் முழுத் தொடர் அல்லது தடுப்பூசிகளின் கலவையைப் பெற்றிருக்க வேண்டும். ஒவ்வொரு முறையும் நீங்கள் கனடாவில் நுழையும் போது உங்கள் தடுப்பூசி நிலை சரிபார்க்கப்படும்.<br><br>கட்டாய எழுமாறான சோதனைத் திட்டத்தின் மூலம் நீங்கள் எழுமாறாக தேர்வு செய்யப்பட்டால், நீங்கள் கனடாவிற்கு வரும் நாளில் (நிலம் மற்றும் விமானப் பயணத்திற்காக) ஒரு கொவிட்-19 மூலக்கூறு சோதனையை முடிக்க வேண்டும். |

| கட்டாய எழுமாறான சோதனையை முடிக்க நீங்கள் எழுமாறாக தேர்ந்தெடுக்கப்பட்டால், நீங்கள் கட்டாயமாக: |
|---|
| • நீங்கள் கனடாவிற்கு வரும் நாளில் இயக்கியபடி **ஒரு கொவிட்-19 மூலக்கூறு சோதனை எடுக்கவும்.**<br>    ○ நீங்கள் தளத்தில் சோதிக்கப்படலாம் அல்லது ஒரு சுய- ஸ்வப் கிற் பெறலாம்.உங்கள் வருகை சோதனையை முடிக்க நீங்கள் வந்தவுடன் பெறும் வழிமுறைகளை நீங்கள் பின்பற்ற வேண்டும். நீங்கள் ஒரு சுய-ஸ்வப் கிற்றை பெற்றால், கனடாவிற்குள் நுழைந்த 24 மணி நேரத்திற்குள் செயலாக்கத்திற்கான உங்கள் மாதிரி சேகரிப்பை பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும். |

- **நீங்கள் நேர்மறையான சோதனைமுடிவைப் பெற்றாலோ அல்லது கொவிட்-19 அறிகுறிகளை அனுபவிக்க தொடங்கினாலோ, பின்புறத்தில் குறிப்பிட்டுள்ளபடி பொருத்தமான பொது சுகாதார அதிகாரியை உடனடியாக தொடர்பு கொண்டு, தனிமைப்படுத்தல் உட்பட அவர்களின் வழிகாட்டலை பின்பற்ற வேண்டும்**. உங்கள் நேர்மறையான சோதனை முடிவு அல்லது அறிகுறிகளை உடனடியாக கனடாவின் பொது சுகாதார முகாமைக்கு (PHAC)1-833-641-0343 என்ற எண்ணில் தெரிவிக்க வேண்டும்.
- **நீங்கள் உறுதியற்ற அல்லது தவறான சோதனை முடிவைப் பெற்றால்**, நீங்கள் மற்றொரு சோதனை எடுக்க வேண்டும். உங்கள் சோதனை முடிவைப் பெற்ற 24 மணி நேரத்திற்குள்உங்கள் சோதனை வழங்குநரை தொடர்பு கொண்டு மற்றொரு சுய-ஸவப் கருவியை முடிக்க ஏற்பாடு செய்யுங்கள்.

- **நீங்கள் எதிர்மறையான சோதனை முடிவைப் பெற்றால்**, பொதுவாக உங்களிடம் கொவிட்-19 இல்லை என்று அர்த்தம். ஆனால் ஏற்கனவே கொவிட்-19 நோயால் பாதிக்கப்பட்டிருக்கும் போது எதிர்மறை சோதனை முடிவைப் பெற முடியும். எடுத்துக்காட்டாக, அறிகுறிகளின் வளர்ச்சிக்கு முன்.
- 4 நாட்களுக்கு பிறகு உங்கள் சோதனை முடிவை நீங்கள் பெறவில்லை என்றால், தயவு செய்து உங்கள் சோதனை வழங்குநரைதொடர்பு கொள்ளவும்.

**நீங்கள் வந்த பிறகு 14 நாட்களுக்கு**

- **நீங்கள் நெருங்கிய தொடர்பு கொண்ட ஒவ்வொரு நபரின் பெயர்கள் மற்றும் தொடர்புத் தகவல்களின் பட்டியலையும்**, அந்த கால கட்டத்தில் பார்வையிட்ட இடங்களையும் **பராமரிக்கவும்**.
- நீங்கள் ஒரு பொது அமைப்பில் இருந்தால், கொவிட்-19 ஐ அறிமுகப்படுத்தும் அல்லது பரப்பும் அபாயத்தைக் குறைக்க **நன்கு கட்டமைக்கப்பட்ட நன்கு பொருந்தக்கூடிய முகக்கவசம் அணியவும்**.
- **உங்கள் கொவிட்-19 வருகைக்கு முந்திய மற்றும் வருகைக்கான சோதனை முடிவுகள் மற்றும் தடுப்பூசி சான்றிதழ்களை வைத்திருங்கள்.**
- Arrive CAN இலிருந்து நீங்கள் அறிவிப்புகளைப பெறலாம், எனினும், நீங்கள் அறிக்கைகளைஅனுப்ப தேவை இல்லை.
- **கனடாவிற்குள் நுழைந்த அடுத்த 14 நாட்களுக்கு, நீங்கள் கொவிட்-19 நேர்மறை சோதனை செய்தாலோ, அல்லது கொவிட்-19 அறிகுறிகளை உணர்ந்தாலோநீங்கள் உடனடியாக;**
  - **பின்புறத்தில் குறிப்பிட்டுள்ளபடி, பொருத்தமான பொது சுகாதாஅதிகாரியைத் தொடகொண்டுதனிமைப்படுத்தல் உட்படஅவர்களின் வழிமுறைகளை பின்பற்றவும்.**
  - **1-833-641-0343 ஐ அழைப்பதன் மூலம் PHAC க்கு புகார் செய்யவும்.**

**எச்சரிக்கை: இந்த உத்தரவுடன் உங்கள் இணக்கம், கண்காணிப்பு, சரிபார்ப்பு மற்றும் அமுலாக்கத்திற்கு உட்பட்டது.நீங்கள் இணங்கவில்லை என்றால் நீங்கள் தனிமைப்படுத்தலில் இருந்து விலக்கு அளிக்கப்படமாட்டீர்கள். நீங்கள் ஒரு தனிமைப்படுத்தப்பட்ட வசதி, அபராதம், டிக்கட், மற்றும் அல்லது சிறைத்தண்டனைக்கு உட்படலாம்**.

| அறிகுறிகளைக் கண்காணிக்கவும் |
|---|
| உங்கள் வருகையின் பின் 14 நாட்களுக்காவது அறிகுறிகளைக் கண்காணிக்கவும். உங்களுக்கு கொவிட்-19 அறிகுறிகள் ஆரம்பித்தால், நீங்கள் கட்டாயம் உடனடியாக:<br>• கீழே குறிப்பிட்டபடி பொருத்தமான பொது சுகாதார அதிகாரியை தொடர்பு கொண்டு அவர்களின் வழிமுறைகளை பின்பற்றவும், தனிமைப்படுத்தல் மற்றும்<br>• 1-833-641-0343 ஐ அழைப்பதன் மூலம் உடனடியாக PHAC க்கு புகாரளிக்கவும்.<br>கொவிட்-19 இன் பொதுவான குறிகளும் அறிகுறிகளும் பின்வருமாறு:<br>• புதிய அல்லது தீவிரமான இருமல்<br>• மூச்சு திணறலும்/மூச்சு எடுப்பதில் சிரமமும்<br>• தசை அல்லது உடல் வலி, சோர்வு, பலவீனம்<br>• உடல் நிலை சரியில்லை<br>• வாசனை அல்லது சுவையின் புதிய இழப்பு<br>• காய்ச்சல், குளிர், அல்லது வெப்பநிலை 38 $^{0}$C க்கு சமமாக அல்லது அதற்கு மேல் உணர்தல்<br>• தோல் மாற்றங்கள் அல்லது தடிப்புகள் (குழந்தைகளில்)<br>• வயிற்று வலி, வயிற்றுப் போக்கு, அல்லது வாந்தி<br>• தலைவலி |



| பொது சுகாதார அதிகாரிகள் | | |
|---|---|---|
| மாகாணங்களும் எல்லைகளும் | **தொலைபேசி எண்கள்** | **இணைய தளம்** |
| பிரிட்டிஷ் கொலம்பியா | 811 | www.bccdc.ca/covid19 |
| அல்பேட்டா | 811 | www.myhealth.alberta.ca |
| சஸ்கச்சவன் | 811 | www.saskhealthauthority.ca |
| மனிடோபா | 1-866-626-4862 | https://manitoba.ca.covid19/restartmb/prs/orders/index.html#current<br>https://www.youtube.com/user/ManitobaGovernment |
| ஒன்டாரியோ | 1-866-797-0000 | www.ontario.ca/coronavirus |
| கியூபெக் | 1-877-644-4545 | www.quebec.ca/en/coronavirus |
| நியூ ப்ரன்ஸ்விக் | 811 | www.gnb.ca/publichealth |
| நோவா ஸ்கோசியா | 811 | www.novascotia.ca/coronavirus |
| ப்ரின்ஸ் எட்வட் தீவு | 811 | www.princeedwardisland.ca/covid19 |
| நியூ வ்வவுண்ட்லான்ட் மற்றும் லப்ரடோர் | 811 அல்லது 1-888-709-2929 | www.gov.ni,ca/covid-19 |
| நுனவுட் | 1-867-975-5772 | www.gov.nu.ca/health |
| வட மேற்கு எல்லைகள் | 811 | www.gov.nt.ca/covid-19 |
| யூகோன் | 811 | www.yukon.ca/covid-19 |

**மேலதிக விபரங்களுக்கு:**

1-833-784-4397 Canada.ca/coronavirus